TAMIL NADU LEGISLATURE
6 NOV 1972
MADRAS

தமிழ் நாடு சட்ட மன்றம்

வியாழக்கிழமை, 1972 ஆகஸ்ட் 24

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்ற மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில், மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் சட்டமன்றம் கூடியது.

I. இரங்கற் குறிப்பு.

தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை முன்னாள் உறுப்பினர் திரு. நாமக்கல் வி. இராமலிங்கம் பிள்ளை இயற்கை எய்தியது குறித்து

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் முன்னாள் உறுப்பினராயிருந்த தேசிய கவி திரு. நாமக்கல் வி. இராமலிங்கம் பிள்ளை அவர்கள் இன்று இயற்கை எய்தினார் என்பதை நான் இந்த அவைக்கு ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. நாமக்கல் வி. இராமலிங்கம் பிள்ளை அவர்கள் 1956-ஆம் ஆண்டு முதல் 1968-ஆம் ஆண்டு வரை சட்டமன்ற மேலவை உறுப்பினராக இருந்தார். 1921-ல் ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கு கொண்டு சிறையிலடைக்கப்பட்டார். அவர் தேசிய இயக்கத்திலும், காந்தியப் பணிகளிலும் பங்கு கொண்டார். அவர் தமிழில் சென்னை அரசவைக் கவிஞராக விளங்கினார். அவர் தமிழில் உரைநடை, கவிதை, நாடக நூல்கள் ஏறத்தாழ 25 நூல்களை இயற்றியுள்ளார்.

அன்னாரது பிரிவினால் வாடும் அவரது குடும்பத்தினருக்கு இந்த அவையின் சார்பில் நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கிறேன்.

அவருடைய மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் இரண்டு நிமிடங்கள் அமைதியாக எழுந்து நிற்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

[அவையினர் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நின்றனர்.]